ஒத்துழைப்போடு நடைபெற்று, முதல்கட்ட புள்ளிவிவரங்கள் தற்போது அரசுக்கு வந்துள்ளன. ஆக்கிரமிப்பு இல்லாத, ஒப்படை செய்யக்கூடிய அரசு புறம்போக்கு தரிசு நிலம் 1 இலட்சத்து 95 ஆயிரம் ஏக்கர். சிறு குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட அரசு புறம்போக்கு தரிசு நிலம் 67 ஆயிரம் ஏக்கர். 98 ஆயிரம் ஏழை விவசாயிகள் இந்த நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். சிறு குறு விவசாயிகளுக்குச் சொந்தமான பட்டா தரிசு நிலம் 7 இலட்சம் ஏக்கர், இது 4 இலட்சத்து 25 ஆயிரம் ஏழை விவசாயிகளுக்குச் சொந்தமானதாக இருக்கிறது.

(1) ஆக்கிரமிப்பு இல்லாத அரசுக்குச் சொந்தமான 1 இலட்சத்து 95 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலத்தை மேம்படுத்தி, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு தலா 2 ஏக்கர் வீதம் பிரித்து வழங்க நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுவிட்டன.

முற்பகல் 9—55

(2) சிறுகுறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள அரசு புறம்போக்கு தரிசு நிலமான 67 ஆயிரம் ஏக்கரைப் பண்படுத்தி அதை ஆக்கிரமித்துள்ள 98 ஆயிரம் விவசாயிகளுக்கே மீண்டும் வழங்கப்பட இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

(3) சிறுகுறு விவசாயிகளுக்குச் சொந்தமான 7 இலட்சம் ஏக்கர் தரிசு பட்டா நிலத்தைப் பொறுத்தவரையில், அவர்களாக விரும்பிக் கேட்டுக்கொண்டால், அந்த நிலத்தை விவசாயம் செய்யத்தக்க நிலமாகப் பண்படுத்தி அவர்களுக்கே திருப்பி வழங்கப்படும். எனவே, இந்த வகையில் முதல் கட்டமாகத் தமிழகத்திலே உள்ள சுமார் 5 இலட்சம் ஏழை விவசாயக் குடும்பங்களுக்குத் தரிசு நிலத்தை மேம்படுத்தி இந்த அரசால் வழங்கப்படும். அதற்கான தொடக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்து அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 5. அரசினர் தீர்மானங்கள்

### (அ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானங்கள். குழுக்களுக்குத் தேர்தல். மதிப்பீட்டுக் குழு. மதிப்பீட்டுக் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

2006 ஆகஸ்ட் 1]

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 195—ன்கீழ், 2006—2007 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

## (ஆ) பொதுக் கணக்குக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழு. பொதுக் கணக்குக் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 203—ன்கீழ், 2006—2007 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.